சார்பு நீதிமன்றம், சிவகங்கை

முன்னிலை. R. பாண்டி, பிஎஸ்.ஸி.,பி.எல்.,

சார்பு நீதிபதி, சிவகங்கை

2026-ம் ஆண்டு மார்ச் திங்கள் 12-ம் நாள் வியாழக்கிழமை

இடைமனு எண்.2/2024

இன்

அசல் வழக்கு எண்.404/2023

....

குணசேகரன் ....மனுதாரர்/1ம் பிரதிவாதி

..எதிர்..

1. சோமசுந்தரம்
2. அரசப்பன் .....எதிர்மனுதாரர்கள்/வாதிகள்
3. மீனா
4. அனிதா
5. வைஷாலி ...எதிர்மனுதாரர்கள்/2, 3, 4 பிரதிவாதிகள்

இம்மனுவானது என் முன்பாக இறுதி விசாரணைக்காக 20.02.2026-ம் தேதியன்று வந்த போது மனுதாரர் தரப்பில் கற்றறிந்த வழக்குரைஞர் திரு.OL.ஜானகிராமன் அவர்கள் ஆஜராகியும், 1, 2 எதிர்மனுதாரர்கள் தரப்பில் கற்றறிந்த வழக்குரைஞர் திரு.P.இளையராஜா அவர்கள் ஆஜராகியும், 3 முதல் 5 எதிர்மனுதாரர்களை நீதிமன்றத்தில் அழைத்தும் அவர்கள் ஆஜராகாததால் அவர்களை ஒருதலைபட்சமாக தீர்மானித்தும், இருதரப்பு வழக்குரைஞர்களின் வாதுரைகளைக் கேட்டும், மனுக்கோப்புகளை ஆய்வு செய்தும் இன்று இந்நீதிமன்றம் வழங்கும். . . .

**உத்தரவு**

அசல் வழக்கில் மனுதாரர்/1ம் பிரதிவாதிக்கு எதிராக கடந்த 03.08.2024-ம் தேதி இந்நீதிமன்றத்தில் பிறப்பிக்கப்பட்டுள்ள ex-party உத்தரவை ரத்து செய்து மனுதாரர்/1ம் பிரதிவாதி தரப்பில் தாக்கல் செய்யும் எதிர்வழக்குரையை ஏற்றுக் கொண்டு தாவா வழக்கை மேல் நடத்த அனுமதியளித்து உத்தரவிடக்கோரி மனுதாரர் தரப்பில் உரிமையியல் நடைமுறைச்சட்டம் கட்டளை 9 விதி 7 மற்றும் பிரிவு 151-ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2. <u>மனுதாரர் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள மனுவின் சுருக்கம்.</u>

எதிர்மனுதாரர்கள்/வாதிகளால் மனுதாரர் மீது விளம்புகை மற்றும் நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி தாக்கல் செய்யப்பட்டு இந்நீதிமன்றத்தில் நிலுவையில் உள்ளது. மேற்படி வழக்கும் கடந்த 03.08.2024-ம் தேதி மனுதாரர் தரப்பில் எதிர்வழக்குரை தாக்கல் செய்ய வாய்தா ஏற்பட்டிருந்தது, ஆனால் அன்றையதினம் மனுதாருக்கு கடுமையான காய்ச்சல் ஏற்பட்டு நாட்டு மருந்து சிகிச்சை எடுத்து வந்ததினால் மனுதாரரால் அன்றைய தினம் மனுதாரரின் வழக்கறிஞரை சந்தித்து எதிர்வழக்குரை தாக்கல் செய்ய முடியாமல் போய் விட்டது. தற்சமயம் மனுதாரரின் உடல்நிலை சரியான பின்பு மனுதாரர் தனது வழக்கறிஞரை சந்தித்து தாவா வழக்கு நிலை குறித்து கேட்டபோது தாவா வழக்கிலும் கடந்த 03.08.2024-ம் தேதி மனுதாரர் இந்நீதிமன்றத்தில் ஆஜராகி எதிர்வழக்குரை தாக்கல் செய்யப்படாததால் மனுதாரருக்கு எதிராக ஒருதலைப்பட்சமாக ex-party உத்தரவு பிறப்பித்துள்ள விபரமும் தெரிய வந்தது. தாவா வழக்கில் மனுதாரர் தரப்பில் உரிய காலத்தில் எதிர்வழக்குரை தாக்கல் செய்ய இயலாமல் போனதற்கு மேற்சொன்ன காரணமே தவிர வேறொன்றும் இல்லை. மேலும் மேற்படி செய்கையும் வேண்டுமென்றே ஏற்பட்டதல்ல.

தாவா வழக்கிலும் மனுதாரருக்கு நல்ல எதிர்வாதம் இருப்பதாக மனுதாரரின் வழக்கறிஞர் அவர்கள் மூலமாக சட்ட ஆலோசனை கிடைத்துள்ளது. எனவே, கடந்த 03.08.2024-ம் தேதி மனுதாரருக்கு எதிராக பிறப்பிக்கப்பட்டுள்ள ex- party உத்தரவை ரத்து செய்து மனுதாரர் தரப்பில் தாக்கல் செய்யும் எதிர்வழக்குரையை ஏற்றுக் கொண்டு தாவர வழக்கை மேல் நடத்த அனுமதி அளித்து உத்தரவாக வேண்டியது அவசியமாக உள்ளது. இல்லாவிடில் மனுதாரருக்கும் மிகுந்த கஷ்ட, நஷ்டம் ஏற்பட்டு விடும். மாறாக இந்த மனுவை அனுமதிப்பதால் எதிர்மனுதாரருக்கு எவ்வித பாதிப்பும் ஏற்படக் கூடியதில்லை. எனவே மனுதாரரின் மனுவை அனுமதித்து உத்தரவிடவேண்டும்.

3) <u>எதிர்மனுதாரர்கள் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள எதிர்உரையின் சுருக்கம்.</u>

தாவா சொத்து 1ம் எதிர்மனுதாரரின் மனைவி லேட்.அம்பிகாவுக்கு கிரைய பாத்தியமான சொத்தாகும். 1ம் எதிர்மனுதாரரின் மனைவி கடந்த 04.03.2023-ம் தேதியில் இறந்துவிட்டார். 1ம் எதிர்மனுதாரரின் மனைவிக்கு 1ம் எதிர்மனுதாரரும் 2ம்

வாதியும், 2ம் பிரதிவாதியும், 3-ம் பிரதிவாதியின் கணவரும், 4-ம் பிரதிவாதியின் தகப்பனாருமான லேட்.பாஸ்கரன் என்பவம் வாரிசுகள். பிராது சொத்து வாதிகளுக்கும் 2 முதல் 4 பிரதிவாதிகளுக்கும் பாத்தியமானது என விளம்புகை செய்தும் அதன் தொடர்ச்சியாக பிராது சொத்திலுள்ள தங்களது அனுபவத்தை 1-ம் பிரதிவாதி எவ்வித தடையும், இடைஞ்சலும் செய்யக்கூடாது என நிரந்தர உறுத்துக் கட்டளை பரிகாரம் வழங்கக்கோரியும் தாவா பிராது தாக்கல் செய்து நிலுவையில் உள்ளது. மேற்படி வழக்கிலும் 1-ம் பிரதிவாதி தரப்பில் எதிர்வழக்குரை தாக்கல் செய்தவற்காக கடந்த 03.08.2024-ம் தேதி இந்நீதிமன்றத்தில் வாய்தா ஏற்பட்டிருந்தது. அன்றைய தினத்தில் மேற்படி பிரதிவாதி இந்நீதிமன்றத்தில் நேரிலோ வழக்கறிஞர் மூலமோ ஆஜராகவில்லை. தனது தரப்பில் எதிர்வழக்குரையும் தாக்கல் செய்யவில்லை. இதனால் மேற்படி 1-ம் பிரதிவாதியை இந்நீதிமன்றத்தில் அழைத்தும் மேற்படியார் ஆஜராகாததால் மேற்படியாருக்கு எதிராக இந்நீதிமன்றத்தில் ஒருதலைபட்ச உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. 2 முதல் 4 பிரதிவாதிகளும் ஏற்கனவே ஒருதலைபட்ச தரப்பினராக தீர்மானிக்கப்பட்டிருப்பதால் மேற்படி வழக்கிலும் எதிர்மனுதாரர்கள் தரப்பு விசாரணைக்காக இந்நீதிமன்றத்தில் வாய்தா ஏற்பட்டிருந்தது. 1-ம் எதிர்மனுதாரரும் நிரூபண வாக்குமூலம் தாக்கல் செய்வதற்காக சென்னையில் இருந்து வந்து இந்நீதிமன்றத்தில் ஆஜராகியிருந்த சமயம் மனுதாரர் / 1-ம் பிரதிவாதி மேற்படி வழக்கில் தனக்கு எதிராக 03.08.2024-ம் தேதி பிறப்பிக்கப்பட்ட ஒருதலைபட்ச உத்தரவை ரத்து செய்யக்கோரி மனு தாக்கல் செய்துள்ளார். மேற்படி மனுவிலும் 1-ம் பிரதிவாதி இந்நீதிமன்றத்தில் ஆஜராகாததற்கான சரியான காரணத்தை சொல்லவில்லை.

எதிர்வழக்குரை தாக்கல் செய்வதற்காக சுமார் 8 மாதங்கள் கால அவகாசம் கொடுத்தும் எதிர்வழக்குரை தாக்கல் செய்யாமல் இருந்துவிட்டு பின்னர் வாய்தா தேதியில் தனக்கு காய்ச்சல் ஏற்பட்டதாகவும் அதற்காக நாட்டுமருந்து சிகிச்சை எடுத்துக்கொண்டதாகவும் ஒரு பொய்யான காரணத்தை தெரிவித்து தாவா மனுவையும் தாக்கல் செய்துள்ளார். காய்ச்சலுக்காக நாட்டுமருந்து சிகிச்சை எடுத்துக்கொண்டதாக சொல்வதும் ஏற்றுக்கொள்ளக்கூடியதாக இல்லை. மருத்துவரிடம் காண்பித்து சிகிச்சை எடுத்துக்கொண்டதாக தெரிவித்தால் அதற்கான சான்றிதழ்கள் கேட்கப்படும் என்பதால் இவ்வாறு காய்ச்சல் ஏற்பட்டதாகவும் நாட்டுமருந்து சிகிச்சை எடுத்துக்கொண்டதாகவும் பொய்யான காரணத்தை

தெரிவித்து தாவா மனுவையும் தாக்கல் செய்துள்ளார். தாவா வழக்கில் தனக்கு நல்ல எதிர்வாதம் இருப்பதாகவும் உண்மைக்கு புறம்பாக குறிப்பிட்டுள்ளார். பிராது சொத்திற்கும் மனுதாரர் / 1-ம் பிரதிவாதிக்கும் எவ்வித சம்மந்தமும் கிடையாது. பிராது சொத்தைப் பொறுத்து மனுதாரர்/1-ம் பிரதிவாதிக்கு எந்தவொரு உரிமையும் பாத்தியமும் கிடையாது.

1-ம் எதிர்மனுதாரர் தமிழக அரசு காவல்துறையில் உளவுப்பிரிவில் பணிபுரிந்து ஓய்வு பெற்றுள்ளார். மேற்படி சொத்தையும் 1ம் எதிர்மனுதாரரின் மனைவி அம்பிகா கடந்த 07.04.2005- ம் தேதி பதிவு செய்யப்பட்ட கிரையப்பத்திரத்தின் மூலமாக மேற்படி பிரவலூர் கிராமத்தை சேர்ந்த கணேசன் மனைவி நாச்சம்மாள் என்பவரிடமிருந்து கிரையம் பெற்றார். மேற்படி கிரைய தேதி முதல் பிராது சொத்தை மேற்படி அம்பிகாவும் தானும் 2-ம் வாதியும் கூட்டாக அனுபவம் செய்து வந்தார்கள். 1ம் எதிர்மனுதாரரின் மனைவி அம்பிகா கடந்த 04.03.2023-ம் தேதியில் உடல்நலக்குறைவு காரணமாக இயற்கை மரணம் அடைந்து விட்டார். மேற்படி அம்பிகாவிற்கும் நானும், 2-ம் வாதியும், 2ம் பிரதிவாதி மீனா என்பவரும், 3ம் பிரதிவாதியின் கணவரும், 4- ம் பிரதிவாதியின் தகப்பனாருமான லேட்.பாஸ்கரன் என்பவருமே வாரிசுகள். மேற்படி அம்பிகாவிற்கும் தங்களைத் தவிர வேறு வாரிசுகள் யாரும் கிடையாது. மேற்படி அம்பிகா உயிருடன் இருக்கும் காலத்திலேயே தங்கள் மூத்த மகனான பாஸ்கரன் கடந்த 02.06.2019-ம் தேதியில் இறந்து விட்டார். மேற்படி பாஸ்கரனுக்கு 3, 4 பிரதிவாதிகளே வாரிசுகள்.

இந்நிலையில், பிராது சொத்தை கிரையம் பெற்ற தனது மனைவி அம்பிகா கடந்த 04.03.2023-ம் தேதியில் இறந்த பின்னர் நானும், 2-ம் வாதியும், 2 முதல் 4 பிரதிவாதிகளும் பிராது சொத்தை வாரிசு கிரமத்தில் அடைந்து அனுபவம் செய்து வருகிறார்கள். பிராது சொத்து வாதிகளாகிய தங்களுக்கும், 2 முதல் 4 பிரதிவாதிகளுக்கும் பாத்தியமான சொத்து ஆகும். மேற்படி சொத்தின் ஒரு பகுதியில் சுமார் 2 செண்டு அளவுள்ள இடத்தில் தான் தனது குலதெய்வ வழிபாட்டிற்காக கோவில் வீடு கட்டி வருகிறார். மேற்படி சொத்தில் ஆழ்குழாய் போர்வெல் அமைத்தும், மின் இணைப்பு பெற்றும் அனுபவம் செய்து வருகிறார். 2ம் வாதி வெளிநாட்டிலும், 2 முதல் 4 பிரதிவாதிகள் வெளியூர்களிலும் வசித்து வருவதால் பிராது சொத்தை 1ம் எதிர்மனுதாரரே பராமரித்தும் அனுபவம் செய்தும் வருகிறார். 2ம் வாதி தனது மகன் ஆவார். 2ம் பிரதிவாதி தனது மகள் ஆவார். மேற்படியாருக்கு திருமணம்

செய்து கொடுக்கப்பட்டு தனது கணவருடன் வெளியூரில் வசித்து வருகிறார். 3, 4 பிரதிவாதிகள் தனது மூத்த மகன் லேட். பாஸ்கரன் என்பவரின் மனைவி மற்றும் மகள் ஆவார்கள். மேற்படி 2 முதல் 4 பிரதிவாதிகளும் வெளியூரில் வசித்து வருவதால் மேற்படியார்களும் தாவா வழக்கில் Proforma 2 முதல் 4 பிரதிவாதிகளாக சேர்க்கப்பட்டுள்ளனர்.

மனுதார்/1ம் பிரதிவாதிக்கும், பிராது சொத்துக்கும் எவ்வித சம்மந்தமும் கிடையாது. 1ம் பிரதிவாதி மேற்படி சொத்தை கிரையம் பெற்ற தனது மனைவி அம்பிகாவின் உடன்பிறந்த சகோதரர் ஆவார். வாதிகளாகிய தாங்கள் வெளியூர்களில் வசித்து வருவதை சாதகமாக எடுத்துக்கொண்ட 1ம் பிரதிவாதி பிராது சொத்தை பொறுத்து போர்ஜரியான ஆவணங்களை உருவாக்கி வைத்திருப்பதாக தெரிவித்து பிராது சொத்தில் உள்ள தங்களுடைய அனுபவத்தை தடைசெய்ய போவதாக கடந்த 05.08.2023-ம் தேதி முதல் பகிரங்க பிரஸ்தாபம் செய்து வருகிறார். 1ம் பிரதிவாதி பிரஸ்தாபம் செய்து வருவது போல் பிராது சொத்தில் அக்கிரமபிரவேசம் செய்து விட்டால் வாதிகளாகிய தங்களுக்கும் தாங்க இயலாத கஷ்ட நஷ்டம் சம்பவித்து விடும். ஆகையால், தானும் பிராதில் கண்ட பரிகாரங்கள் கோரி தாவா பிராரையும் 1ம் எதிர்மனுதாரர் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளார். இந்நிலையில் தாவா வழக்கிலும் பிரதிவாதி எதிர்வழக்குரை தாக்கல் செய்யாததால் மேற்படியாருக்கு எதிராக கடந்த 03.08.2024-ம் தேதியில் ஒருதலைபட்ச உத்தரவும் பிறப்பிக்கப்பட்டுள்ளது. மேற்படி வழக்கிலும் தனது தரப்பு விசாரணைக்காக இந்நீதிமன்றத்தில் வாய்தா ஏற்பட்டுள்ளது. அதன் பின்னர் தாவா வழக்கில் மேற்படி பிரதிவாதி தனக்கு எதிராக பிறப்பிக்கப்பட்ட ஒருதலைபட்ச உத்தரவை ரத்து செய்யக்கோரி மனுவையும் எதிர்வழக்குரையுடன் சேர்த்து தாக்கல் செய்துள்ளார். மேற்படி எதிர் வழக்குரையிலும் பொய்யான மற்றும் அவதூறான சங்கதிகளை குறிப்பிட்டு தாக்கல் செய்துள்ளார். அவையாவற்றுக்கும் 1ம் எதிர்மனுதாரர் தனது ஆட்சேபணையை தெரிவித்துள்ளார்.

தாவா சொத்தும் தனது மனைவி தனது வருமானத்தைக் கொண்டு கிரையம் வாங்கிய சொத்தாகும். தான் தமிழ்நாடு காவல்துறை புலனாய்வு பிரிவில் சுமார் 29 ஆண்டுகள் பணிபுரிந்து வந்த நிலையில் தனது மனைவி இல்லத்தரசியாக இருந்து

வீட்டு வரவு செலவுகளை கவனித்துக்கொண்டார். மேற்படியார் எந்த வேலைக்கும் சென்றதில்லை. அவருக்கென்று தனிப்பட்ட வருமானம் எதுவும் இருந்ததில்லை. 1ம் எதிர்மனுதாரரின் மனைவி இறக்கும் நாள் வரை 1ம் எதிர்மனுதாரரும், 2-ம் வாதியான அவரது மகன் அரசப்பனும் நல்ல முறையில் கவனித்து பராமரித்து வந்தார்கள். 1ம் எதிர்மனுதாரரின் மனைவிக்கு வாழ்வாதாரத்திற்கு தேவையான அனைத்து அத்தியாவசிய தேவைகளையும் 1ம் எதிர்மனுதாரரே நேரடியாக பணம் செலவு செய்து வந்தார். அத்துடன் மாதந்தோறும் 1ம் எதிர்மனுதாரருக்கு கிடைத்து வந்த ஓய்வூதியத்தின் ஒரு பகுதியை 1ம் எதிர்மனுதாரரின் மனைவியின் வங்கிக்கணக்கிற்கு நேரடியாக அனுப்பி வந்தார். சென்னை, வலசரவாக்கம், ஆழ்வார் திருநகரில் உள்ள யூனியன் பேங்க் ஆப் இந்தியாவில் (முன்னாள் ஆந்திரா வங்கி) 1ம் எதிர்மனுதாரரின் மனைவியின் சேமிப்புக் கணக்கு எண்.062210031010754-க்கு 1ம் எதிர்மனுதாரர் நேரடியாகவே மாதந்தோறும் ரூ.8,000/- வீதம் பணம் செலுத்தி வந்தார். அதுபோக அமெரிக்காவில் இருந்து வரும் 2-ம் வாதியான தனது மகன் அரசப்பனும் கடந்த 2018-ம் ஆண்டு முதல் தனது மனைவிக்கு மாதந்தோறும் அவரது வங்கிக்கணக்கின் மூலமாக தொடர்ந்து பணம் அனுப்பி வந்தார். 1ம் எதிர்மனுதாரரும் அவரது மகனுமே 1ம் எதிர்மனுதாரரின் மனைவியை பராமரித்து வந்தோமே தவிர 1-ம் பிரதிவாதியின் அரவணைப்பில் அவர் ஒருபோதும் இருந்தது கிடையாது.

1ம் எதிர்மனுதாரரின் வருமானத்தைக் கொண்டு தனது மனைவியின் பெயரில் வாங்கப்பட்ட தாவா சொத்தை அவரது நேரடி வாரிசுதாரரான தான் அபகரிக்கவேண்டிய அவசியம் இல்லை. அத்துடன் தனது மனைவி ஒருபோதும் தாவா சொத்தை 1-ம் பிரதிவாதிக்கு உயில் எழுதி வைக்கவில்லை. மேற்படி சொத்தின் அசல் ஆவணமும் நாளது தேதி வரை தனது கைவசமே இருந்து வருகிறது. மேற்படி சொத்து குறித்த எந்தவொரு ஆவணத்தையும் 1-ம் பிரதிவாதி தனது எதிர்வழக்குரையுடன் சேர்த்து தாக்கல் செய்யவில்லை என்பதிலிருந்தே அவ்வாறு எந்தவொரு ஆவணமும் தனது மனைவி ஏற்படுத்தி தரவில்லை என்பது தெளிவாக தெரியவருகிறது. கடந்த 04.03.2023-ம் தேதி தனது மனைவி இறந்தவுடன் தனது மகன் 2-ம் வாதி அமெரிக்காவிலிருந்து வருவதற்காக தனது மனைவியின் உடலை சென்னை போரூரில் உள்ள ஸ்ரீ ராமச்சந்திரா மருத்துவமனையில் 2 நாட்கள் பதப்படுத்துதலில் வைத்திருந்தார்கள். அதற்கான முழுக் கட்டணத்தையும் 1ம்

எதிர்மனுதாரரே செலுத்தி ரசீது பெற்றுள்ளார். அத்துடன் மேற்படியாருக்கான இறுதிச்சடங்குகளையும் 1ம் எதிர்மனுதாரரும் அவரது மகனான 2-ம் வாதியுமே செய்து வைத்தார்கள். இறுதிச்சடங்குகளுக்கான செலவுகள் அனைத்தையும் 1ம் எதிர்மனுதாரரே செய்து முடித்தார். 1-ம் பிரதிவாதி மேற்படி துக்க நிகழ்வில் கலந்து கொண்டு உடனடியாக சென்றுவிட்டார். இவை அனைத்தையும் மறைத்து பொய்யான சங்கதிகளை குறிப்பிட்டு தாவா எதிர்வழக்குரையையும் இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளார். மேற்படி சங்கதிகள் அனைத்தையும் மறைத்துவிட்டு பொய்யான சங்கதிகளை கண்டு எதிர்வழக்குரையையும், ஒருதலைபட்ச உத்தரவையும் ரத்து செய்யக்கோரும் மனுவையும் தாக்கல் செய்துள்ளார். 1ம் எதிர்மனுதாரருக்கு தற்போது 78 வயதாகிறது. தாவா வழக்கை நடத்தாமல் கால தாமதத்தை ஏற்படுத்த வேண்டும் என்பதற்காகவும் 1ம் எதிர்மனுதாரருக்கு வீண் அலைச்சலையும் மன உளைச்சலையும் ஏற்படுத்த வேண்டும் என்பதற்காகவும் மனுதார்/1-ம் பிரதிவாதி எதிர்வழக்குரை தாக்கல் செய்யாமல் இருந்துவிட்டு தற்சமயம் மேற்படியாருக்கு எதிராக பிறப்பிக்கப்பட்ட ஒருதலைபட்ச உத்தரவை ரத்து செய்யக்கோரி மிகவும் காலதாமதமாக மனுதாக்கல் செய்துள்ளார். தாவா மனுவும் அனுமதிக்கப்பட்டால் 1ம் எதிர்மனுதாரருக்கு ஈடு செய்ய இயலாத இழப்பு ஏற்பட்டுவிடும். எனவே மேற்படி மனுவை 1ம் எதிர்மனுதாரரின் செலவுத் தொகையுடன் தள்ளுபடி செய்து உத்தரவிடவேண்டும்.

**4.** இம்மனுவில் தீர்மானிக்கப்படவேண்டியது யாதெனில் மனு அனுமதிக்கத் தக்கதா என்பதேயாகும்?

**5**. இருதரப்பிலும் சாட்சிகள் யாரும் விசாரிக்கப்படவில்லை. சான்றாவணங்கள் எதுவும் குறியீடு செய்யப்படவில்லை. இருதரப்பு வாதங்கள் கேட்கப்பட்டது. வழக்கு கோப்புகள் பார்வையிடப்பட்டன.

**6**. மனுதாரர் தரப்பில் மனுதாரருக்கு கடுமையான காய்ச்சல் ஏற்பட்டு நாட்டு மருந்து சிகிச்சை எடுத்து வந்ததினால் மனுதாரரால் 03.08.2024-ம் தேதியன்று இந்நீதிமன்றத்தில் ஆஜராகி எதிர்வழக்குரை தாக்கல் செய்யப்படாததால் மனுதாரருக்கு எதிராக ஒருதலைப்பட்சமாக ex-party உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளதாகவும் எனவே, கடந்த 03.08.2024-ம் தேதி மனுதாரருக்கு எதிராக பிறப்பிக்கப்பட்டுள்ள ex- party உத்தரவை ரத்து செய்து மனுவை அனுமதித்து உத்தரவிடக்கோரி மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**7**) எதிர்மனுதாரர்கள் தரப்பில் தாவா சொத்து 1ம் எதிர்மனுதாரரின் மனைவி லேட்.அம்பிகாவுக்கு கிரைய பாத்தியமான சொத்து என்றும், எதிர்வழக்குரை தாக்கல் செய்வதற்காக சுமார் 8 மாதங்கள் கால அவகாசம் கொடுத்தும் எதிர்வழக்குரை தாக்கல் செய்யாமல் இருந்துவிட்டு பின்னர் வாய்தா தேதியில் தனக்கு காய்ச்சல் ஏற்பட்டதாகவும் அதற்காக நாட்டுமருந்து சிகிச்சை எடுத்துக்கொண்டதாகவும் ஒரு பொய்யான காரணத்தை தெரிவித்து தாவா மனுவையும் தாக்கல் செய்துள்ளதாகவும் காய்ச்சலுக்காக நாட்டுமருந்து சிகிச்சை எடுத்துக்கொண்டதாக சொல்வதும் ஏற்றுக்கொள்ளக்கூடியதாக இல்லை என்றும், பிராது சொத்திற்கும் மனுதாரர் / 1-ம் பிரதிவாதிக்கும் எவ்வித சம்மந்தமும் கிடையாது என்றும், பிராது சொத்தை கிரையம் பெற்ற அம்பிகா கடந்த 04.03.2023-ம் தேதியில் இறந்த பின்னர் 1-ம் எதிர்மனுதாரரும், 2-ம் வாதியும், 2 முதல் 4 பிரதிவாதிகளும் பிராது சொத்தை வாரிசு கிரமத்தில் அடைந்து அனுபவம் செய்து வருவதாகவும் மேற்படி சொத்தின் ஒரு பகுதியில் சுமார் 2 செண்டு அளவுள்ள இடத்தில் தனது குலதெய்வ வழிபாட்டிற்காக கோவில் வீடு கட்டி வருவதாகவும், 2ம் வாதி வெளிநாட்டிலும், 2 முதல் 4 பிரதிவாதிகள் வெளியூர்களிலும் வசித்து வருவதால் பிராது சொத்தை 1ம் எதிர்மனுதாரரே பராமரித்தும் அனுபவம் செய்தும் வருவதாகவும், 1ம் பிரதிவாதி பிராது சொத்தை பொறுத்து போர்ஜரியான ஆவணங்களை உருவாக்கி வைத்திருப்பதாக தெரிவித்து பிராது சொத்தில் உள்ள தங்களுடைய அனுபவத்தை தடைசெய்ய போவதாக கடந்த 05.08.2023-ம் தேதி முதல் பகிரங்க பிரஸ்தாபம் செய்து வருவதாகவும், தாவா வழக்கை நடத்தாமல் கால தாமதத்தை ஏற்படுத்த வேண்டும் என்பதற்காகவும் 1ம் எதிர்மனுதாரருக்கு வீண் அலைச்சலையும் மன உளைச்சலையும் ஏற்படுத்த வேண்டும் என்பதற்காகவும் மனுதார்/1-ம் பிரதிவாதி எதிர்வழக்குரை தாக்கல் செய்யாமல் இருந்துவிட்டு தற்சமயம் இந்த மனுவை தாக்கல் செய்துள்ளதாகவும் ஆட்சேபணையை தெரிவிக்கப்பட்டது.

**8)** தாவா அசல் வழக்கானது விளம்புகை மற்றும் நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி 2023-ம் ஆண்டு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. மனுதாரர் கடுமையான காய்ச்சல் ஏற்பட்டு நாட்டு மருந்து சிகிச்சை எடுத்துக்கொண்டதால் நீதிமன்றத்தில் ஆஜராக இயலவில்லை எனவும், கூறும் காரணம் ஏற்றுக்கொள்ளக்கூடியதாக உள்ளது. எதிர்மனுதாரர் தரப்பில் எதிர்வழக்குரை தாக்கல் செய்வதற்காக சுமார் 8 மாதங்கள் கால அவகாசம் கொடுத்தும் எதிர்வழக்குரை தாக்கல் செய்யாமல்

இருந்துவிட்டு தாவா வழக்கை நடத்தாமல் கால தாமதத்தை ஏற்படுத்த வேண்டும் என்பதற்காகவும் 1ம் எதிர்மனுதாரருக்கு வீண் அலைச்சலையும் மன உளைச்சலையும் ஏற்படுத்த வேண்டும் என்பதற்காகவும் தற்போது இந்த மனுவை தாக்கல் செய்துள்ளதாகவும் ஆட்சேபணை தெரிவிக்கப்பட்டுள்ளது. மனுவை அனுமதிக்காவிட்டால் மனுதாரருக்கு மிகுந்த கஷ்ட நஷ்டம் ஏற்படுவதாக மனுவில் தெரிவித்துள்ளார். அசல் வழக்கில் கோரப்பட்டுள்ள பரிகாரம் இருதரப்பு விசாரணைக்கு பின்பு தான் தீர்மானிக்க இயலும். மனுதாரர் மனுவை அனுமதித்தால் தான் அவரது வழக்கினை நிரூபணம் செய்ய இயலும். எனவே வழக்கின் சங்கதிகளை கருத்தில் கொண்டும், நீதியின் நலன் கருதியும் எதிர்மனுதாரர்களின் செலவுத் தொகையுடன் இந்த மனுவை அனுமதிக்கலாம் என இந்த நீதிமன்றம் கருதுகிறது.

முடிவாக தாவா மனுவானது செலவுத்தொகையுடன் அனுமதித்து உத்தரவிடப்படுகிறது. மனுதாரர் ரூ.1000/-ஐ எதிர்மனுதாரர்களுக்கு 17.03.2026-ம் தேதிக்குள் செலுத்தும் பட்சத்தில் தாவா மனு அனுமதிக்கப்படும் என்றும் தவறும் பட்சத்தில் தாவா மனுவானது தானாக தள்ளுபடியாகிவிடும் எனவும் உத்தரவிடப்படுகிறது.

இவ்வுத்தரவானது என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு என்னால் பிழைகள் சரிபார்க்கப்பட்டு 2026-ம் ஆண்டு மார்ச் திங்கள் 12-ம் நாளாகிய இன்று திறந்த நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

PANDY R Digitally signed by PANDY R Date: 2026.03.12 16:57:30 +0530

சார்பு நீதிபதி

சிவகங்கை.

மனுதாரர் மற்றும் எதிர்மனுதாரர்கள்

தரப்பில் சாட்சி மற்றும் சான்றாவணங்கள் - இல்லை.

PANDY R Digitally signed by PANDY R Date: 2026.03.12 16:57:36 +0530

சார்பு நீதிபதி

சிவகங்கை.

Subordinate Court, Sivagangai
I.A.No.2/2024 in
O.S.No.404/2023
**Draft/Fair/Order**
12.03.2026.